மாலை எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாலை நாளிதழ்
மாநிலம் பயனுற!

# ஜிப்மர் சார்பில் சாலை பாதுகாப்பு வாக்கத்தான் போட்டி

புதுச்சேரி, பிப். 9-

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை சார்பில் "ஜெய் ஹோ" சாலை பாதுகாப்பு விழிப்புணர்வை வலியுறுத்தி நேற்று வாக்கத்தான் போட்டி நடந்தது.

இதில், கிழக்கு போக்குவரத்து ஆய்வாளர் நாகராஜன் கலந்துகொண்டு சாலை பாதுகாப்பு குறித்து பேசினார். இதனைத் தொடர்ந்து, வடக்கு கிழக்கு போக்குவரத்து காவல் கண்காணிப்பாளர் ரச்சனா சிங் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

எலும்பியல் துறை பேராசிரியர்கள் டாக்டர் ஜெகதீஷ் மேனன், டாக்டர் தீப் சர்மா, நர்சிங் அலுவலர் ரபீஷ்குமார், இணை பேராசிரியர்கள் டாக்டர் பசுபதி, டாக்டர் பிரபு ஆகியோர் கலந்து கொண்டனர்.




முன்னதாக எஸ்.பி., ரச்சனா சிங் பேசுகையில், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்தும், போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்ற வேண்டிய அவசியம், சாலை விபத்துகளை தடுப்பதில் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு குறித்து வலியுறுத்தியும் வாக்கத்தான் போட்டியை துவக்கி வைத்தார். காந்தி சிலை அருகே துவங்கிய வாக்கத்தான் போட்டி 3 கி.மீ., ஒயிட் டவுன் முழுவதும் சுற்றி, மீண்டும் காந்தி சிலை அருகே முடிவடைந்தது. இப்போட்டியில், ஜிப்மர் பேராசிரியர்கள், மருத்துவப் பணியாளர்கள், செவிலியர்கள், ஜிப்மர் மருத்துவ மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 800க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மாலை
எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாலை நாளிதழ்
மாநிலம் பயனுற!

# ஜிப்மரில் மலிவு விலை உணவகம் முதலமைச்சர் ரங்கசாமி திறந்து வைத்தார்

புதுச்சேரி, பிப். 10-

புதுச்சேரி கோரிமேடு ஜிப்மர் மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதுச்சேரி அரசு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் மலிவு விலை உணவகத்தை முதலமைச்சர் ரங்கசாமி துவக்கி வைத்தார்.

இந்த உணவகம் தேசிய முக்கியத்துவம் பெற்ற நிறுவனமான ஜிப்மர் மற்றும் புதுச்சேரி சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் ஒத்துழைப்புடன் அமைக்கப் பட்டுள்ளது. நோயாளிகள், உறவினர்கள் மற்றும் ஜிப்மர் பணியாளர்களுக்கு குறைந்த விலையில் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் நோக்கில் இவ்வுணவகம் துவங்கப் பட்டுள்ளது. இந்த உணவகத்தை மக்கள் பயன்பாட்டுக்கு முதலமைச்சர் ரங்கசாமி நேற்று துவக்கி வைத்தார். சுற்றுலாத்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன், அரசு கொறடா ஏ.கே.டி. ஆறுமுகம், ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நேகி, புதுச்சேரி சுற்றுலா வளர்ச்சி கழக இயக்குநர் முரளிதரன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.



இந்த உணவகம் காலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை செயல்படும். விரைவில் 24 மணி நேர சேவையாக விரிவுபடுத்தப்படவுள்ளது. இதன் மூலம் மருத்துவமனை வளாகத்தில் இடையறாத உணவு சேவை உறுதி செய்யப்படும். இந்த முயற்சி, ஏழை மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நோயாளி களுக்கு மிகுந்த பயன் அளிப்பதுடன், உயர்தர சுகாதார மற்றும் தரநிலை களை பின்பற்றி புதுச்சேரி சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் மூலம் நேரடியாக நிர்வகிக்கப் படுகிறது. நோயாளிகளின் நலனை மேம்படுத்தும் வகையில், புதுச்சேரி அரசுடன் இணைந்து இத்தகைய மக்கள் நல முயற்சிகளை முன்னெடுக்க ஜிப்மர் தொடர்ந்து உறுதியாக செயல்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.